DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**CC.No. 2/2022**

**அ.சா.– 2**

| | |
|---|---|
| பெயர் : திரு. தனபால் | கிராமம்: |
| த/பெ. : திரு. சேகர் | தாலூக்கா : |
| வயது : | தொழில்: |

Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of August, 2024.

( எதிரிகள் ஆஜர். )

**முதல்விசாரணை**:–

நான் பூசாரிப்பட்டி, வைரன்காடு சேலத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.–1 என்னுடைய தாயார். 1வது எதிரி என் பெரிய தாத்தாவின் பேரன். 2வது எதிரி என் தங்கையின் கணவர். இறந்துபோன திருப்பதி 1வது எதிரியின் அண்ணன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். 04.04.2017ம் தேதி மாலை சுமார் 7மணியளவில் நான் என்னுடன் வீட்டின் தாழ்வாரத்தில் டிவி பார்த்துக்கொண்டு கயிற்றுக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தேன். தாயாரிடம் சாப்பாடு கேட்டேன். அவர் சாப்பாடு எடுத்து வர கிச்சன் சென்றுவிட்டார். 7.30 மணியளவில் திருப்பதி தொண்ணையுடனும், கோவிந்தராஜ் வீச்சறுவாளுடனும் கௌதமன் அவர்களுடனும் எங்கள் வீட்டின் தாழ்வாரத்தில் வந்த திருப்பதி டியூப் லைட்டை தொண்ணையில் அடித்த உடைத்தார். என்னுடைய தாயார் கத்திக்கொண்டு ஓடிவந்தார்.

திருப்பதி தொண்ணையால் என் முகத்தில் ஓங்கி அடித்தார். எனக்கு மேல் பல் ஒன்று உடைந்து விட்டது. கோவிந்தராஜ் (A1) என்னுடைய இடது மணிக்கட்டிலும், தலையிலும் இடது பக்க தோள்பட்டையிலும் வீச்சறுவாளால் வெட்டினார். என் அம்மா கத்தியதால் ஊர்மக்கள் ஓடி வந்தார்கள். திருப்பதி என் அம்மாவை தொண்ணையால் சாவுடி என்று நெஞ்சில் அடித்துவிட்டு, என்னையும்

பின்னந்தலையில் அடித்துவிட்டு, ஊர்மக்கள் வருவதை பார்த்துவிட்டு திருப்பதி ஓடினார். கோவிந்தராஜ் வீச்சறுவாளுடன் அவர்கள் பின்னாலேயே ஓடினார். கௌதமனும் அவர்கள் பின்னால் ஓடினாார். அதன் பின்னர் தர்மன் ஆட்டோ எடுத்துவந்து தீவட்டிப்பட்டி காவல்நிலையத்திற்கு என்னையும் என் அம்மாவையும் அழைத்து சென்றார். நடந்த சம்பவத்தை நானும் என் அம்மாவும் சொன்னோம். போலீசார் எழுதிக்கொண்டார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் வரப்பு தகராறு உள்ளது. திருப்பதி என் மனைவியுடன் தொடர்பு வைத்துள்ளாயா என்ற முன்விரோதத்தில் எதிரிகள் எங்களை தாக்கினார்கள். அது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைடுஞர் ஆஜரில் இல்லை. எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும், குறுக்குவிசாரணை முன்வரவில்லை

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**CC.No. 2/2022**

**அ.சா.– 1**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. சுமதி | கிராமம்: |
| க/பெ. : திரு. சேகர் | தாலுக்கா : |
| வயது : | தொழில்: |

Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of August, 2024.

( எதிரிகள் ஆஜர். )

**முதல்விசாரணை**:–

நான் தற்பொழுது பூசாரிப்பட்டி, வைரன்காடு, சேலத்தில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் இறந்து 14 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு 2 மகன்கள், ஒரு மகள். ஆஜர் எதிரிகளில் கோவிந்தராஜ் (A1), கௌதமன் (A2) தெரியும். இறந்துபோன திருப்பதியும், கோவிந்தராஜும் என்னுடைய பெரிய மாமனார் நாராயணனின் பேரன்கள். கௌதமன் கோவிந்தராஜின் தங்கையின் கணவர். 04.04.2017 ல் இரவு சுமார் 7 மணியளவில் என் வீட்டிற்கு முன் தாழ்வாராத்தில் என்னுடைய மகன் தனபால் வேலைக்கு சென்றுவிட்டு வந்து கயிற்று கட்டிலில் படுத்து டிவி பார்த்துக்கொண்டிருந்தார். நான் மகனுக்கு சாப்பாடு கொடுப்பதற்காக வீட்டிற்குள் சென்றிருந்தேன். என் பெரிய மாமனார் வீடு என் வீட்டிலிருந்து 3 வீடு தள்ளி உள்ளது. திருப்பதி அங்கிருந்து பெரிய தொண்ணை (தென்னை மட்டை) எடுத்து வந்தார். 1 வது எதிரி வீச்சறுவாளுடனும், 2 வது எதிரி அவர்களுடன் வந்தார். அவர்களுடன் என்வீட்டிற்கு வந்து, தாழ்வாரத்தில் இருந்த டியூப் லைட்டை திருப்பதி தொண்ணையில் அடித்து உடைத்து விட்டார். திருப்பதி என் மகன் தனபாலை முகத்தில் தொண்ணையால் அடித்தார். அவருக்கு பல் உடைந்துவிட்டது. உதடு கிழிந்துவிட்டது. நான் வீட்டிலிருந்து ஓடி வந்தேன். என் மகன் வீட்டிலிருந்து தப்பித்து ஓட முற்பட்டபோது கோவிந்தராஜ் வீச்சறுவாளால் என்மகனின் இரண்டு

கைகளையும், முகத்திலும், நெற்றிலும், தோள்பட்டையிலும் மாறி மாறி வெட்டினார். என்மகன் தனபால் அந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டார். நான் அதை ஏன்டா இவ்வாறு செய்கிறீர்கள் என்று தடுக்கபோனபோது என்னை திருப்பதி தொண்ணையால் என் நெஞ்சில் சாவுடி, கண்டாரவோழி என்று சொல்லி அடித்தார். நான் ஓ என்று கத்தினேன். கௌதமும் எங்கள் தாழ்வாரத்திலிருந்த அருவாமனையை எடுத்து தேவடியா கண்டாரவோழி சாவுடி என்று சொல்லி என் நெற்றியிலும் மூக்கிலும் அடித்தார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஓடிவந்தார்கள். மீண்டும் திருப்பதி தொண்ணையால் என் மகனை சாவுடா என்று சொல்லி மீண்டும் தொண்ணையால் அடித்தார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்தவுடன் அவர்கள் வெளியே ஓடிவிட்டார்கள். சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்னர் எங்கள் காட்டின் பொழியை வெட்டிவிட்டதால் எதிரி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன்பகை இருந்து வந்தது. என்னுடைய மகன் தனபால் இறந்த திருப்பதியின் மனைவியை ஏன்டா வைத்துள்ளாய் என்று சம்பவத்திற்கு 3 நாட்களுக்கு முன்னர் வந்து தகராறு செய்து, உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி சென்றார். இது சம்மந்தமாக என் மகன் தர்மனுடன் நான் தீவட்டிப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். போலீசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ–1**. என்னை 2வது எதிரி தாக்க பயன்படுத்திய அருவாள்மனை நீதிமன்றத்தில் காட்டப்படுவதுதான். அது **சா.பொ.–1.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைடுஞர் ஆஜரில் இல்லை. எதிரிகளுக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தும், குறுக்குவிசாரணை முன்வரவில்லை

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.